*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 314/2020***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW–1 (LW–1)***

*Name / Father's Name:* ***திருமதி.சுமதி க/பெ. முருகேசன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **30.10.2025.**

துவக்க நேரம் 12.54 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 05.08.2020 அன்று இரவு சுமார் 08.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபொழுது, செந்தில், பழனிவேல் ஆகிய இருவரும் எனது வீட்டிற்கு வந்தார்கள். அதில் செந்தில் என்பவர், என்னை கீழே தள்ளிவிட்டார். பழனிவேல் என்பவர் கட்டையால், எனது கையில் அடித்து எனது இடதுகை பெருவிரலை உடைத்துவிட்டார்.

2) எதிரிகள் இருவரும் உன் புருஷன் எங்கடி தேவடியா, அவன வரசொல்லுடி என்று அசிங்கமாக என்னை திட்டி, உன்னை கொல்லாமல் விட்மாட்டன்டி தேவடியா என்று மிரட்டினார்கள். என்னை அடித்து, வீட்டினுள் தள்ளி கதவை சாத்திவிட்டு சென்றுவிட்டார்கள். மறுநாள் 06.08.2020 அன்று எனக்கு தெரிந்த சரவணன் என்பவர் உதவியுடன் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்து சேர்ந்தேன்.

3) ஆத்தூர் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்தபொழுது அங்கு வந்த தம்மம்பட்டி காவல் நிலைய போலிசாரிடம், நான் நடந்த விபத்தை சொல்லி புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம்

காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் அடிபட்ட பின்பு முதன்முதலில் ஆத்தூர் அரசு மருத்துவமனையில்தான் சிகிச்சைக்கு சேர்ந்தேனா என்றால் ஆமாம். ஆத்தூர் அரசு மருத்துவமனையில், மருத்துவர் எனக்கு ஏற்பட்ட காயம் எப்படி ஏற்பட்டது என்றும், யாரால் ஏற்பட்டது என்றும் விசாரித்து எழுதிக்கொண்டுதான் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டேனா என்றால் ஆமாம்.

2) வழக்கு சம்பவம் பற்றி நான் முதன்முதலில் மருத்துவரிடம்தான் சொன்னேனா என்றால் இல்லை. மேற்படி மருத்துவர் விசாரணையில், நான், என்னை தெரிந்த 10 நபர்கள் தாக்கியதாக சொன்னேனா என்றால் ஆமாம். போலிசார், என்னிடம் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 7ம் தேதி விசாரித்தார்கள், மாதம் தெரியவில்லை. சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலிசார், என்னை விசாரித்தார்கள் என்றால் 2 நாட்கள் கழித்து விசாரித்தார்கள்.

3) சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் இரவு 08.00 மணிக்கு நடந்தது. சம்பவம் நடந்த மறுநாள் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு வந்தேன் என்றால் காலை 06.00 மணிக்கு வந்தேன். எனது புகார் வாக்குமூலத்தை போலிசார், என்னிடம் படித்து காண்பித்த பின்புதான் நான் கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம்.

4) எனது புகார் வாக்குமூலத்தில், "என்னை அடித்துவிட்டு, உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு, எனது வீட்டில் வைத்து என்னை பூட்டிவிட்டு சென்றுவிட்டனர்" என்று சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். பின்னிட்டு காலை 05.00 மணிக்கு வீட்டைவிட்டு வெளியே வந்து

சரவணன் என்பவர் உதவியுடன் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தேன் என்று சொன்னேனா என்றால் ஆமாம். ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு சுமார் 06.00 மணியளவில் வந்துவிட்டேனா என்றால் வந்துவிட்டேன்.

5) நான் எவ்வாறு பூட்டிய வீட்டிலிருந்து வெளியே வந்தேன் என்றால் சரவணன் என்பவர் பூட்டை உடைத்து, என்னை வெளியே அழைத்துவந்தார். இந்த விவரத்தை நான், எனது புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன், ஆனால் போலிசார் எழுதவில்லை. நான், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நேரம் காலை 11.45 மணி என்றாலும், நான் சொல்வதுபோல் காலை 06.00 மணிக்கு மருத்துவமனையில் நான் அனுமதிக்கப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

6) வழக்கு சம்பவத்தில் நான் பாதிக்கப்படவில்லை என்பதால்தான், 06 ம் தேதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுவிட்டு, 07 ம் தேதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, நான் மயக்கத்தில் இருந்ததால் என்ன தேதி சொன்னேன் என்று சரியாக ஞாபகமில்லை.

7) நான் சொன்னதுபோல் மயக்கத்தில் இருந்திருந்தால் மருத்துவர், என்னை விசாரித்து விபத்து பதிவேட்டு குறிப்புகளை குறிப்பிட்டிருக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. போலிசார், என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் ஒரு முறை மருத்துவமனையில் உள்ளபொழுதுவி சாரித்தார்கள்.

8) எதிரிகள், என்னை வீட்டில் வைத்து பூட்டவில்லை என்பதால்தான், நான், போலிசார் விசாரணையில் எதிரிகள் என்னை பூட்டியதாக சொல்லிய சங்கதி போலிசார் விசாரணையில் பொய் என்பது தெரியவந்ததால் எதிரிகளுக்கெதிராக இந்திய தண்டனை சட்டப்பிரிவு 341 பிரிவை நீக்கி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

9) என்னிடம் போன் வசதி உள்ளதா என்றால் உள்ளது. எதிரிகள், என்னை வீட்டில் வைத்து பூட்டிவிட்டதாக சொல்லியுள்ள நிலையில், அது குறித்து நான் யாருக்கும் போன் எதுவும் செய்து என்னை வெளியே அழைத்துச்செல்ல உதவுமாறு யாருக்கும் தகவல் சொல்லவில்லையா என்றால் அன்று இரவு சொல்லவில்லை, மறுநாள்தான் சொன்னேன்.

10) என் குடும்பத்திற்கும், எதிரிகளுக்கும் முன்விரோதம் உள்ளதா என்றால் உள்ளது. அது என்ன முன்விரோதம் என்று தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. எனது மாமியார் பெயர் ராஜம்மாளா என்றால் ஆமாம். என் மாமியார் ராஜம்மாளும், எதிரி பழனிவேலின் தாயாரும் சகோதரிகள் என்றால் இல்லை.

11) ராஜம்மாள் என்பவர் அடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தாரா என்றால் அனுமதிக்கப்பட்டிருந்தார், அவராகவே காயத்தை ஏற்படுத்திக்கொண்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். என் மாமியாரை ஏன் பராமரிக்கவில்லை என்று எதிரி பழனிவேல் கேட்டாரா என்றால் கேட்டார், எங்க வீட்டு சண்டைக்கு நீங்க ஏன் கேட்கிறிங்க என்று நான்தான் கேட்டேன். அந்த சண்டைக்கு பின்னிட்டு மருத்துவமனையிலிருந்து ராஜம்மாள், அவரது மகள் வீட்டிற்கு சென்றுவிட்டாரா என்றால் ஆமாம். அவர் அங்கேயே இறந்துவிட்டாரா என்றால் ஆமாம்.

12) எனது மாமியார் ராஜம்மாள், எதிரி பழனிவேலின் சின்னம்மா என்பதால், அவருக்கு ஏன் சோறு போடவில்லை என்று பழனிவேல் கேட்டதற்கு அவரை நாங்கள் அடித்துவிட்டு, எங்கள் மீது போடப்பட்டுள்ள வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக இவ்வழக்கினை பொய்யாக ஜோடித்து எதிரிகளுக்கெதிராக கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

13) இவ்வழக்கு சம்பவம் குறித்து மருத்துவரிடம் சொன்ன தெரிந்த 10 நபர்களில் இதர 8 நபர்களின் பெயர்களை குறிப்பிட்டு நான் எனது போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை, 10 நபர்களில் 2 நபர்களின்

பெயர்களைத்தான் சொன்னேன். எனக்கும், என் குடும்ப உறுப்பினர்களுக்கும் எதிராக இந்நீதிமன்றத்தில் சி.சி.261/2020 என்ற எண்ணில் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் உள்ளது. அந்த வழக்கில் எதிரி பழனிவேல் மற்றும் என் மாமியார் ராஜம்மாளின் கையை உடைத்தது சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

14) எதிரி பழனிவேலின் சின்னம்மா ராஜம்மாளுக்கு ஏன் சோறு போடவில்லை என்று கேட்டதற்காக எதிரி பழனிவேல், ராஜம்மாளின் கையை உடைத்துவிட்டு, மேற்படி வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக இவ்வழக்கினை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.35 A.N

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.10.30 17:49:19 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 314/2020***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-5)***

*Name / Father's Name:* ***திரு.முருகேசன் த/பெ. செங்கோடகவுண்டர்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **30.10.2025.**

துவக்க நேரம் 01.36 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். அ.த.சா.1, எனது மனைவி ஆவார். கடந்த 05.08.2020 அன்று நான் கோயம்புத்தூரில் வேலை செய்துகொண்டிருந்தபொழுது, எனது மனைவி, என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு எதிரிகள் செந்தில்குமார், பழனிவேல், பிரபு ஆகியோர்கள் அடித்துபோட்டுவிட்டதாக தகவல் சொன்னார்.

2) நான், மறுநாள் வருவதாக சொல்லிவிட்டு 06ம் தேி ஊருக்கு மெட்டாலா அருகே வந்துகொண்டிருந்தபொழுது, செந்தில்குமார், பழனிவேல், பிரபு ஆகியோர்கள் என்னை காரில் கடத்திக்கொண்டு சென்று, ஒரு வீட்டில் கட்டிபோட்டுவிட்டு, என்னை என் மகனுக்கு தொலைபேசியில் அழைத்து இங்கே வரச்சொல் இல்லையென்றால் உன்னை கொன்றுவிடுவேன் என்று சொல்லிக்கொண்டே தகாத வார்த்தைகளால் திட்டி என்னை மிரட்டினார்கள்.

3) என்னை கடத்தியதை தெரிந்து, போலிசார் விசாரித்துக்கொண்டிருந்தபொழுது எதிரிகள், என் காட்டிற்கு அருகில் உள்ள SI வீட்டு காட்டின் அருகில் படுக்கவைத்துவிட்டார்கள். மறுநாள் 07ம் தேதி வந்து

ஆத்தூர், அரசு மருத்துவமனையில் இருந்த எனது மனைவியை பார்த்தேன். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான், எனது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன், ஆனால் அவர்கள் எழுதிக்கொள்ளவில்லை. நான் எனது முதல் விசாரணையில் சொல்லியதுபோல் எதிரிகள், என்னை கடத்தவில்லை என்றாலும், அவ்வாறு கடத்தி SI வீட்டில் என்னை விட்டிருந்தால் அதுகுறித்து எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றாலும், நான் இவ்வழக்கிற்காக பொய்யாக இவ்வாறு சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2) வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். எனது தாத்தா ராமசாமிகவுண்டரும், எதிரி பழனிவேலின் தாத்தா பெரியாகவுண்டரும் உடன்பிறந்த சகோதரர்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது மனைவி கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3) எனது அம்மா ராஜம்மாளின் கை உடைந்துவிட்டதா என்றால் ஆமாம் உடைந்துவிட்டது, எதிரிகள் செந்தில்குமாரும், பழனிவேலும் அவரை அடித்துவிட்டார்கள். அதன் பிறகு எனது அம்மா, அவரது மகள் வீட்டிற்கு சென்றுவிட்டாரா என்றால் ஆமாம், அங்கேயே இறந்துவிட்டார்.

4) எனக்கும், என் குடும்ப உறுப்பினர்களுக்கும் எதிராக இந்நீதிமன்றத்தில் சி.சி.261/2020 என்ற எண்ணில் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் உள்ளது. அந்த வழக்கில் எதிரி பழனிவேல் மற்றும் என் மாமியார் ராஜம்மாளின் கையை உடைத்தது சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

5) எதிரி பழனிவேலின் சின்னம்மா ராஜம்மாளுக்கு ஏன் சோறு போடவில்லை என்று கேட்டதற்காக எதிரி பழனிவேல், ராஜம்மாளின் கையை நாங்கள் உடைத்துவிட்டு, மேற்படி வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக இவ்வழக்கினை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.50 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.10.30 17:49:35 +0530

Judicial Magistrate No.2, Attur.